பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 02 புதன்கிழமை 16.04.2025 கதிர் 158

## இது ரகசியம் அல்ல!



ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நாளை யாழ்ப்பாணம் வருகிறார். நல்லூர் கந்தசாமி ஆலயம் அருகே முத்திரைச் சந்தியில் உள்ள கிட்டுப் பூங்காவில் அவர் பங்கேற்கும் ☞2

# தமிழர்கள் தனி ஒரு கட்சிக்கே வாக்களிக்கவேண்டும் அது தமிழ் அரசு கட்சியாக மட்டுமே இருக்கவேண்டும்

நாடாளுமன்றத்தேர்தலில்வடக்கில் உள்ள இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும்வெற்றிபெற்றதன்மூலம் தமிழ்மக்களின்ஆணைதங்களுக்கே கிடைத்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தி உலக அரங்கில் தெரிவித்து வருகின்றது. தேசியமக்கள்சக்திக்கோ, தென்னிலங்கைக்கட்சிகளுக்கோதமிழ் மக்கள்ஆணைகொடுத்துவிடவில்லை என்ற செய்தியை எமது மக்கள் இந்த உள்ளூராட்சிமன்றதேர்தலில்தெளிவாக வெளிப்படுத்தவேண்டும். அதற்கு தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளுக்கே வாக்களிக்கவேண்டும். அதுவும் ஒரு தமிழ்க் கட்சிக்கே ஒட்டுமொத்தமாக வாக்களிக்கவேண்டும். அந்தக் கட்சி தமிழ் அரசுக் கட்சியாகவே இருக்கவேண்டும் என்று இலங்கைத் அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சித்திரைப் புத்தாண்டன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் களத்தில் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. மே மாதம் ஆறாம் திகதி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வாக்களிப்பு நடைபெறுமா என்பதைக் கூறமுடியாதுள்ளது.

அவ்வாறானநிலையிலும்கூட இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை எமது மக்கள் புதிய அணுகுமுறையில் கையாளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் சரித்திரபூர்வமாகக் கலாசாரபாரம்பரியத்துடன்வாழ்ந்துவருகின்றவடக்கு,கிழக்குபிரதேசங்களில் தமிழர்கள் தமக்கே ஆணை கொடுத்திருக்கின்றனர் என்று ☞2

# தெற்குக் கட்சிகள் வசம் எந்தவொரு உள்ளாட்சி சபைகளும் விழக்கூடாது

## சிறீதரன் எம்.பி. திட்டவட்டம்

எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியிடமும் வடக்கு கிழக்கின் உள்ளூராட்சிசபைகள்கிட்டிவிடக்கூடாது என்றுதமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கரைச்சி பிரதேச சபையின் கல்மடுநகர வேட்பாளர் யோகநாதனை ஆதரித்து நாடாளு மன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் கல்மடு கிராமத்தில்தேர்தல்பரப்புரைக்கூட்டம்திங்கட் கிழமை மாலை இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய நாடாளு மன்றஉறுப்பினர்தெரிவித்ததாவது:

சிங்களக் கட்சிகளிடம் உள்ளூராடர்சிசபைகள் போனால் தமிழர்களுக்கு நடக்கப்போகும் அநீதியைத்தமிழ்மக்கள்நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திற்குவந்தவிஜித ஹேரத்தமிழில் பேசியிருக்கிறார். முன்புமகிந்தராஜபக்சவும்தமிழில் பேசித் திரிந்தார், வாங்கோ எல்லாரும் ஒன்றாக இருப்போம் என்று. தமிழில் பேச முயற்சிக்கும் இதே விஜித ஹேரத்தான், கடைசியாக நடந்த ஜெனீவா கூட்டத்தொடரில், தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் எமக்கு மூன்று ☞8

# கம்பஹா நகரில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு

கம்பஹா நகரில் நேற்று இரவு 8 மணியளவில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பஹாவிற்கு அழைத்து வரப்பட்ட ஒருவரைகுறிவைத்துமேம்பாலம்அருகே இந்தச் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

### ஜி.எஸ்.பி. வரிச் சலுகை குறித்து ஆராய

# ஐரோப்பிய ஒன்றிய குழு ஏப். இறுதியில் வருகிறது

இலங்கைக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பாக மதிப்பீடு செய்யும் நோக்குடன், ஏப்ரல் மாத இறுதி பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்குவரவுள்ளதாகஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அந்தக் குழுவினர், அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளர் எனவும், ஜீ.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகையின்நிபந்தனைகள் குறித்தும்விவாதிக்கஉள்ளனர்என்றும் அவர் கூறியுள்ளார். ☞2

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த மாகாண ஆளுநர்களுடன் ஆய்வு

## அயலுறவுத்துறை அமைச்சு நடவடிக்கை

நாட்டின் சுற்றுலாத்துறையை மேலும் வலுப்படுத்தி, அதற்குப் புத்துயிரூட்டும் நோக்கில் மாகாண ஆளுநர்களுடனான கலந்தாய்வுசெயன்முறையொன்றுஅயலுறவு அமைச்சினால் தொடங்கப்பட்டுள்ளது.

அயலுறவு, வெளிநாட்டு ☞8

# கொண்டாட்ட நாள்களில் 412 பேருக்குப் பாதிப்பு

ஏப்ரல் 13 மற்றும் 14 ஆகிய சித்திரைப் புதுவருடக் கொண்டாட்ட நாள்களில் பதிவான பல்வேறு விபத்துகளில் ஏற்பட்ட காயங்கள் காரணமாககொழும்புதேசியமருத்துவமனையில் (ஹிகூஷிஎீ) மொத்தம் 412 பேர் சேர்க்கப்பட்டனர் என்று மருத்துவமனையின் விபத்துப் ☞2

# கொழும்பு உட்பட 18 சபைகளில் அஞ்சல் வாக்களிப்பு தாமதமாகும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளூராட்சி சபைகளுக்கான அஞ்சல் வாக்களிப்பு தாமதமாகும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மே 6 இந்த 18 உள்ளூராட்சி மன்றங்களிலும் தேர்தலை நடத்துவதற்கு மேன்முறையீட்டு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஆணையம் தெரிவிக்கிறது.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த தேர்தல் ஆணையத் தலைவர் ஆனந்த ரத்நாயக்க, நீதிமன்ற தீர்ப்புகளை ☞2

# தமிழ் மக்களை தவறாக வழிநடத்தப் பார்க்கிறார்

## 'ஏக்கிய ராஜ்ய' விடயத்தில் கஜேந்திரகுமார் மீது குற்றச்சாட்டு

2016 முதல் 2019 வரையில் ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஏக்கிய ராஜ்ய' என்றசொற்பதத்தைமுழுஅர்த்தத்தையும் தெளிவாகப் புரிந்துகொண்டே அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ்தலைவர் கஜேந்திரகுமார் வேண்டுமென்றே பொய் சொல்கிறார். தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றார். ☞2

# தென்னையில் ஏறியவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

புத்தாண்டு தினத்தில் கள் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கல்வியங்காட்டைசேர்ந்த சின்னத்துரை ரவி (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்

தென்னை மரத்தில் ஏறிய போது, தென்னையில் கட்டப்பட்டிருந்த பொச்சு மட்டை கழன்று விழுந்தமையால் நிலை தடுமாறி தென்னையில் இருந்து தவறி கீழே விழுந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கீழே விழுந்து படுகாயமடைந்தவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்

## இனி இது .....

மக்கள் சந்திப்பு என்கிற தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் கடந்த இரண்டு நாட்களாக நடக்கின்றன. கிட்டுப் பூங்காவைத் துப்புரவு செய்தல், மேடை அமைத்தல் என்பன இடம்பெறுகின்றன.

இந்தத் தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரதமர், அமைச்சர்கள் பலர் என்று யாழ்ப்பாணத்திற்கு ஏற்கனவே வந்து போய்விட்டார்கள். அந்த வரிசையில் இறுதியானதாக ஜனாதிபதியின் வருகை அமையக்கூடும். பொதுவாக ஜேவிபியினருக்கு ஒருபழக்கம் உண்டு. தொலைதூர இடங்களில் இருந்தேனும் ஆட்களைப் பேருந்துகளில் ஏற்றிவந்து கூட்ட மேடைகளை நிரப்புவார்கள். இந்தத் தடவை உள்ளூராட்சித் தேர்தல் என்பதாலோ என்னவோ அப்படிக் கூட்டம் கூட்டப்படவில்லை. அதனால் பிரதமர் உட்பட அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டங்கள் சோபிக்கவும் இல்லை. மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே கூட்டங்களில் பங்கெடுத்தார்கள்.

கடைசியாக நாடாளுமன்றத் தேர்தலின்போது பாசையூரில் நடந்த அநுரவின் கூட்டத்திற்கு பெரும் கூட்டம் வந்திருந்தது. பல பேருந்துகளில் அழைத்து வரப்பட்டவர்களும் அங்கிருந்தனர். அந்தக் கூட்டத்தில் பேசிய அநுர, ஜனாதிபதித் தேர்தலில் தாமே வெற்றிபெறுவோம் என்பதை ஊடகங்கள் தமிழ் மக்களுக்குச் சரிவரத் தெரிவிக்கவில்லை என்பதால் தனக்கு 27 ஆயிரம் வாக்குகள் மட்டுமே கிடைத்தது என்றார். அந்தத் தேர்தலில் தெற்கில் தமது கட்சி வேலை செய்த அளவிற்கு வடக்கில் வேலை செய்யவில்லை என்பதையும் ஒத்துக்கொண்டார். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில்தான் வெற்றுபெற்றதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அலுவலகம் நிரம்பி வழிந்தது என்றும் அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி பாசையூர் கூட்டத்தில் திரண்டிருக்கும் மக்களைப் பார்க்கும்போது ஒரு கட்சியின் கீழ் ஒன்றிணைய யாழ்ப்பாண மக்கள் தயார் என்பதைக் இது காட்டுகின்றது என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் பின்பான கவர்ச்சியும் வசீகரமும் இப்போதும் தேசிய மக்கள் சக்தியின் பால் இருக்கிறதா என்பதை இந்தத் தேர்தல் கூட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கொழும்பு ஆளும்தரப்பினருடன் அரசியல் ஆதாயத்தைத் தேடி ஒட்டிக்கொள்ளும் மக்கள் கூட்டம் எப்போதுமே வடக்கில் இருந்துதான் வந்திருக்கிறது. அது கடந்த காலங்களில் டக்ளஸ் தேவானந்தாவாகவும் அங்கஜன் இராமநாதனாகவும் மகேஸ்வரனாகவும் விஜயகலாவாகவும் என பல வடிவங்களில் இருந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதன் திரட்சியை தேசிய மக்கள் சக்தி ஒன்றாக அறுவடை செய்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தத் திரட்சியை அறுவடை செய்வது மிகச் சவாலானது. ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு சபையிலும் அந்தத் திரட்சி கிடைக்காது. அதனால்தான் இந்தத் தேர்தலில் சில சபைகளையாவது கைப்பற்றும் இலக்கோடு முயற்சிகளில் தேசிய மக்கள்

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழர்கள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தியினர் தெரிவித்-து வருகின்றார்கள். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 10 சதவீதமான மக்கள் நாடாளுமன்றத்தேர்தலில்வாக்களிக்கவில்லை. அப்படியிருந்தும்கூட, தேசிய மக்கள் சக்கதியினருக்கு 25 சதவீதமான வாக்குகளே வழங்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு 20 சதவீதமான வாக்குகளும் ஏனைய தரப்பினருக்கு அதற்கு குறைவான வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கட்சிகள் பெற்ற வாக்குகளைக் கூட்டினால் அது தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளைவிட அதிகமானது.

ஆனாலும் வடக்கு தேர்தல் மாவட்டங்களில் தனியொரு கட்சியாக அதிக வாக்குகளை எடுத்ததை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களின் ஆணை தங்களுக்கத்தான் கிடைத்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தி பரப்புரை செய்கின்றது. இதுவொரு தவறான பிம்பமாகும்.

இவ்வாறான நிலையில், ஆளும்தரப்புக்கே தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கின்ற தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தல் அமையவுள்ளது. ஆகவே தேசிய மக்கள் சக்திக்கோ, தென்னிலங்கைக் கட்சிகளுக்கோ தமிழ் மக்கள் ஆணை கொடுத்துவிடவில்லை என்ற செய்தியை எமது மக்கள் தெளிவாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும்.

அவ்வாறான தெளிவான முடிவினை வெளிப்படுத்துவதாக இருந்தால் தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியை நிராகரித்து தமிழ்க் கட்சிக்களுக்கு வாக்களிப்பது முக்கியமானது என்பதோடு அந்த வாக்குகள் ஒரு தமிழ்க் கட்சிக்கே அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒரு கட்சிக்கு வாக்களிப்பதாக இருந்தால் அந்த தமிழ்க்கட்சி எது என்று கேள்வி எழுப்பப்படலாம். இந்த நாட்டில் 75 ஆண்டுகளாக தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான அடிநாதமான சமஷ்டி அடிப்படையிலான தீர்வினைக் கோரும் ஒரு கட்சியாக தமிழ் அரசுக் கட்சியே காணப்படுகின்றது.

சில கட்சிகள் சமஷ்டிக்கு எதிராக இருந்துவிட்டு தேர்தல் காலத்தில் மீண்டும் சமஷ்டியை ஆதரிப்பதாக கூறுகின்றார்கள். ஆனால் தமிழ் அரசுக் கட்சி பெடரல் கட்சி என்று அழைக்கப்பட்டு தொடர்ச்சியாக அதற்காகக் குரல்கொடுத்துவரும் கொள்கை ரீதியான கட்சியாகும். ஆகவே அந்தக் கட்சிக்கே தமிழ் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களிக்கவேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி, நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள அரசியல் கட்சியில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், எதிர்க்கட்சிகளில் இரண்டாவது பெரிய கட்சியாகவும் இருப்பது தமிழ் அரசுக் கட்சி மட்டுமே. ஆகவே, தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிப்பதன் ஊடாகவே தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஆளும்தரப்பின் பொய்ப் பரப்புரைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

அதற்காகத் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் 59 சபைகளிலும் போட்டியிடும் தமிழ் அரசுக் கட்சிக்கே தமது ஆணையை வழங்கவேண்டும். விசேடமாக யாழ்ப்பாணத்தில் அனைத்து மன்றங்களுக்குமான ஆணை தமிழ் அரசுக் கட்சிக்கே வழங்கப்படவேண்டும் என்றார்.

## தமிழ் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏக்கிய ராஜ்ய என்பது ஒருமித்த நாடு என்ற அர்த்தத்திலேயே அந்த வரைவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான வரைவிலக்கணமும் தெளிவாக அந்த உறுப்புரையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

"உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் தேசியக் கட்சிகள் இம்முறை தங்களுக்குள் மோதிக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஓர் உடன்பாடுஎட்டப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. அதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் இணங்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால், 'ஏக்கிய ராஜ்ய" என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியோடு தமிழ் அரசுக் கட்சி இணங்கிப் போவதால் அவர்களை எப்படி தென்னிலங்கைக் கட்சிகளிலிருந்து விலக்கிப் பார்க்க முடியும் என்ற சாரப்பட கஜேந்திரகுமார் அண்மையில் வினா எழுப்பிப் பேசியிருக்கின்றார். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?" - என்று அவரிடம் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன் தெரிவித்ததாவது: -

அப்படி கஜேந்திரகுமார் நடந்துகொள்வது துரதிஷ்டவசமானது. அவர் அப்படி நடந்து கொள்கின்றார் என்பதற்காக ஏற்கனவே நாங்கள் எடுத்த முடிவிலிருந்து மாற விரும்பவில்லை. அவர்களை நாங்கள் பதிலுக்கு விமர்சிக்கப் போவதில்லை. ஆனால் மக்கள் மத்தியில் சில குழப்பங்களை ஏற்படுத்தும் விதமான கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன. அவை குறித்துத் தெளிவுபடுத்துவோம்.

நாங்கள் 'ஏக்கியராஜ்ய'வுக்கு எதிரானவர்கள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இன்றைய அரசமைப்பில் 'ஏக்கியராஜ்ய' என்று 'ஒற்றையாட்சி' என்ற தமிழ் பதத்திற்கு ஒப்பாகச் சிங்களத்தில் சொல்லப்படுகின்ற பதத்துக்கு நாங்கள் முற்றிலும் எதிரானவர்கள்.

நாங்கள் ஒற்றையாட்சி முறைமைக்கு எதிரானவர்கள். அதற்கு இணங்காதவர்கள். ஆங்கிலத்தில் சொல்வதானால் யுனிட்டரிஸ்டேட் (ஷீஜஷ்மிழிஷதீறீமிழிமிள) என்பதற்கு நாங்கள் எதிரானவர்கள். ஒற்றையாட்சி, யுனிட்டரி ஸ்டேட் என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகின்ற 'ஏக்கியராஜ்ய'வுக்கு நாங்கள் எதிரானவர்கள். அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள். ஆனால் கஜேந்திரகுமார் 'ஏக்கிய ராஜ்ய' என்று சிங்களத்தில் குறிப்பிடுவதன் மூலம் (அவர் தமிழில் ஒற்றையாட்சி என்று குறிப்பிடமாட்டார், ஏக்கிய ராஜ்ய என்று சிங்களத்திலேயேதான் சொல்வார்) என்ன சொல்லப் பார்க்கிறார்?

2016 முதல் 2019 வரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு வரைவிலே பயன்படுத்தப்பட்ட சொல்லைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரானதாகப் பயன்படுத்தப்பார்க்கிறார். அந்த அரசமைப்பு வரைபிலே அந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வரைபிலே அந்தச் சொல் தனியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதனைத் தவறாக அர்த்தப்படுத்தி, தமிழ் மக்களைப் பிழையாக அவர் வழிநடத்த முயல்கிறார்.

அரசமைப்பு வரைபிலே பாவிக்கப்பட்ட சொற்றொடர் 'ஏக்கிய

ராஜ்ய' - 'ஒருமித்த நாடு' என்பதாகும். அதில் 'ஏக்கிய ராஜ்ய' என்று சொல்லப்படுவது 'ஒரு நாடு' என்பதையே குறிக்கின்றது. 'ரஜய" என்று சொன்னால்தான் ஆளும் முறையை அல்லது ஆட்சி முறையைக் குறிக்கும்.

இது தமிழ் மக்கள் பலருக்கு தெரியாத விடயமாக இருக்கலாம். ஆனால் கஜேந்திரகுமாரிற்கு நன்கு தெரியும். அவருக்குத் தமிழைவிடச் சிங்களம் நன்கு தெரியும். அவர் தெரிந்து கொண்டேதான் இப்படி மக்களைப் பிழையாக வழிநடத்துகிறார்.

அங்கு 'ஏக்கிய ரஜய' என்ற சொல் மட்டும் பயன்படுத்தப்படவில்லை. கூடவே 'ஒரு நாடு' என்று அர்த்தப்படும் தமிழ்ச் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒரு நாடு என்பதைத்தான் தமிழில் 'ஒருமித்த நாடு' சொல்லப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, அந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட அந்த உறுப்புரையிலேயே அதற்கு வரைவிலக்கணமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்ன சொல் பயன்படுத்தப்பட்டாலும் அங்கே பயன்படுத்தப்படும் அந்தச் சொல்லின் அர்த்தம் இதுதான் என்பது அங்கு குறிப்பிடப்பட்டிருந்தால் அதுதான் அந்தச் சொல்லின் அர்த்தம்.

அரசமைப்பு வரைவில் சொல்லப்பட்டுள்ள வரைவிலக்கணம் என்ன கூறுகிறது? "மத்தியிலும் மாகாணங்களிலும் அரசமைப்பில் சொல்லப்பட்டபடி அதிகாரங்களைப் பயன்படுத்துகின்ற நாடு'' என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் மத்தியிலும் மாகாணங்களிலும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது? இது ஒற்றையாட்சி அல்ல என்பதைக் குறிப்பதற்காகத்தான் அப்படிச் சொல்லப்பட்டுள்ளது. ஒற்றை ஆட்சி என்றால் மத்திய அரசினால் மாத்திரம் அதிகாரங்கள் செலுத்தப்படும். ஆனால் அரசமைப்பு வரைவில் மத்தி மற்றும் மாகாணங்களால் அதிகாரங்கள் செலுத்தப்படும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

சில சட்டங்களில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்களின் விளக்கங்களை-, அர்த்தங்களைச் சட்டத்தின் கடைசி உறுப்புரையிலே சொல்வார்கள். என்ன சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று பட்டியலிட்டிருப்பார்கள். ஆனால் இது அப்படி அல்ல. அதே உறுப்புரையிலேயே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதை வாசிக்கும்போதே அதன் அர்த்தம் புரியக்கூடியதாக எழுதப்பட்டிருக்கின்றது.

அதாவது மத்தியிலும் மாகாணங்களிலும் அரசமைப்பில் சொல்லப்பட்டபடி அரச அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற நாடு எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் அது ஒற்றையாட்சியைக் குறிப்பது அல்ல, மத்தியிலும் மாகாணங்களுமாக பத்து அலகுகளிலே அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நாடு என்று கருப்பு - வெள்ளையிலேயே தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றபோது, அதைப்பற்றி பேசாமல், அந்தச் சொற்றொடரின் முழு வடிவத்தையும் பயன்படுத்தாமல், வேண்டுமென்றே தமிழில் பேசுகின்ற போதும் 'ஏக்கிய ராஜ்ய' என்ற சிங்களச் சொல்லைச் சொல்லிக் கொண்டு, மக்களை தவறாக வழி நடத்துகிறார் கஜேந்திரகுமார். இது துரதிஷ்டவசமான விடயம்.

அவரை விமர்சிப்பதற்காக இதனை நான் சொல்லவில்லை. நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக மட்டுமே சொல்லுகிறேன். தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்க போவதில்லை என்ற முடிவிலிருந்து மாறப்போவதில்லை. இருந்தாலும் மக்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதால் இந்த விளக்கத்தை அளிக்கின்றேன் - என்றார்.

## கொண்டாட்ட....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு இயக்குநர் மருத்துவர் இந்திகா ஜகோடா தெரிவித்தார்.

அவர்களில் ஆறு பேர் அனுமதிக்கப் பட்டபோதே இறந்துவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர்களிடம் பேசிய மருத்துவர் ஜகோடா, பதிவான பெரும்பாலான சம்பவங்கள் வீடுகளுக்குள் இடம்பெற்ற விபத்துகளுடன் தொடர்புடையவை என்றும், 94 பேர் வீதிவிபத்துக்களால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆண்டு பட்டாசு தொடர்பான காயங்கள் குறைந்துள்ளதாகவும் டாக்டர் ஜகோடா குறிப்பிட்டார். பட்டாசு காயங்கள் காரணமாக இரண்டு பேர் மட்டுமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## கொழும்பு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்த பின்னர் தபால் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவது குறித்து அறிவிப்போம் என்றார்.

இருப்பினும், தற்போது வரை 227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஆணையம் கூறுகிறது. உள்ளாட்சித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்குப்பதிவு ஏப்ரல் 22, 23 மற்றும் 24 ஆகிய நாள்களில் நடைபெற உள்ளது.

அந்த நாட்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய நாள்களில் தங்கள் வாக்குகளை பதிவு செய்யலாம் என்று ஆணையம் தெரிவிக்கிறது.



காலைக்கதிர் Kalaikkathir

### கிராம சமூகத்தின் பொன் எழுத்தாக அமைந்த

# நாயக்கர்சேனை பாடசாலையின் இரு மாடிக் கட்டடத் திறப்பு விழா

(சியாஜ்)

கற்பிட்டி நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் ( நாவுக்கரசர் வித்தியாசாலை) வித்தியாலயத்திற்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின்( ஐ.எம்.எச்.ஓ) முழுமையான நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி கட்டடத் திறப்பு விழாகடந்தவியாழக்கிழமைபாடசாலையின்அதிபர் வீ.ராமநாதன் தலைமையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

கற்பிட்டி நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் (நாவுக்கரசர் வித்தியாலய) வித்தியாலயத்தின் இந்த நிகழ்வு இந் நாயக்கர்சேனை கிராம சமூகத்தின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும் எனவும் 1960-09-30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நாவுக்கரசர் வித்தியாலயம் வரலாற்றை பறைசாற்றும் முகமாக இந்த அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இரண்டு மாடி கட்டிடத்தின் அடிக்கல் 2024-09-30 ஆம் திகதி நாட்டப்பட்டதும் சிறப்புக்கள் நிறைந்து எனவும் பாடசாலையின் அதிபர் வீ.ராமநாதன் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.



நாயக்கர்சேனை மக்களின் வரலாற்று நிகழ்வாக இடம்பெற்ற பாடசாலை கருமாரி கட்டிடத் திறப்பு விழாவின் பிரதம அதிதிகளாக புத்தளம் வலயக் கல்வி பணிமனையின் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ஏஎம் அனீஸ மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதி கல்வி பணிப்பாளர் என்எம்.ஆர் தீப்தி பெர்னாண்டோ கௌரவ அதிதிகளாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினர் வைத்தியர் எஸ்.தேவேந்திரன் மற்றும் ஐ.எம்.எச்.ஓ. அமைப்பின் தலைவர் ராஜம் தேவேந்திரன் சிறப்பு அதிதிகளாக மாகோ கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் எஸ்.எச் றிஸ்வி, புத்தளம் வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் கமலேந்திரன், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம் ஜவாத், அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கை வதிவிடம் பணிப்பாளரும் ஓய்வு பெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் எம். ராதாகிருஷ்ணன் , ஓய்வுபெற்ற அதிபர் வீ.நடராசா, புத்தளம், சிலாபம் வலயத்தின் பாடசாலை அதிபர்கள், நாவுக்கரசர் வித்தியாலய ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினர்கள் பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி லில்லி





ஜெயசீலன் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்துடன் பாடசாலை சார்பாகவும் நாயக்கரசேனை சமூகம் சார்பாகவும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவர் மற்றும் ஆலோசனை சபை உறுப்பினர் ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் நினைவு பரிசிலகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளரிப்பழ விற்பனை அம்பாறையில் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கரையோர பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் ஆங்காங்கே வெள்ளரிப்பழம் உட்பட பழவகைகள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

குறிப்பாக சம்மாந்துறை -அம்பாறை பிரதான வீதி, கல்முனை- அக்கரைப்பற்று , பிரதான வீதியோரங்களில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டோகளில் வெள்ளரிப்பழத்தை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

நேற்று கூட சித்திரை புத்தாண்டு தினத்திலும் இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் வெள்ளரிப்பழத்தைக் கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இம் மாவட்டத்தில் தற்போது நிலவி வருகின்ற வரட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தை தவிர்ப்பதற்காக இவ்வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளை சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு வெளி இடங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருகின்ற பழ வகைகளின் தரங்களை பரிசோதிப்பதற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கமைய சுகாதார பரிசோதகர்கள் தினமும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தவிர தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்திற்கு அதிகிராக்கிஏற்பட்டுள்ளதுடன் 250 ரூபாய் முதல் சுமார் 850 ரூபாய் வரை இவ் வெள்ளரிப்பழம் சிறியது முதல் பெரியது வரையான பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த இப்பழ வகையானது பெரும்பாலும் வெப்பமான காலங்களிலேயே அதிகமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெருமளவில் வெள்ளரிப்பயிர்ச் செய்கை பண்ணப்பட்டு வருவதுடன் இவைகள் ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தில் உடல் உஸ்ணத்தை போக்கும் விதமாக பொதுமக்கள் வர்த்தக பழம், இளநீர் ,தோடை ,திராட்சை வகைகள் வாழைப்பழங்கள் குளிர்பானம் செய்யும் விற்பனை நிலையங்கள் அதிகமாக நாடிச் செல்வதனையும் காண முடிகின்றது.

# காட்டுயானை தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழப்பு

(சக்திவேல்)

மட்டக்களப்பு போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட பாலையடிவட்டை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காட்டு யானைத்தாக்குத லுக்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 31 வயதுடைய இராசதுரை ரஜீகரன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு காட்டுயானையின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் மிக நீண்டகா லமாகவிருந்து இவ்வாறு காட்டுயானைகளின் தாக்குதல்களும், அட்டகாசங்களும் அதிகரித்தவண்ணமுள்ளன.





எனினும் இதற்கு துறைசார்ந்தோர் நிரந்தர தீர்வை முன் வைக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

# மடத்தடியில் புத்தாண்டு கை விசேஷம்

(சகாதேவராஜா)

வரலாற்று சிறப்பு மிக்கமடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் சித்திரை புத்தாண்டு வருடப்பிறப்பை முன் னிட்டு ஆலய குருஸ்ரீ சபாகோவர்த்தன சர்மா வின் விஷேட பூசை வழி பாடுகளை தொடந்து அடியவர்களுக்கு கைவிஷேடம் வழங்கி வைக்கப்பட்ட போது..



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நீதி தொடர்ந்து மறுக்கப்படுமா?

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள்தொடர்பானவிசாரணைகளின் 5ஆம்ஆண்டுபூர்த்திக்குஇன்னும்5நாள்களேஉள்ளன. ஆனால், அதற்கான சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளில் உருப்படியான முன்னேற்றங்கள் எவையும் இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை. தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்ததும் இந்தத் தாக்குதல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அதன் சூத்திரதாரிகள் அதற்குப் பின்னணியில் செயற்பட்டவர்கள் எல்லோரும் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்று அரசுத் தலைவர் அநுரகுமார பரப்புரை மேடைகளில் எல்லாம் முழங்கி வந்தார். அவர் ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் கடந்த நிலையிலும் அது தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்பட்டதாக இல்லை.

ஆளும்தரப்பின் இந்த அசமந்தம் மற்றும் காலதாமதம் குறித்து விசனமடைந்த பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித், தாக்குதலின் 5ஆம் ஆண்டு நிறைவுக்கு முன்பாக உருப்படியான முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்றால் மீண்டும் வீதிக்கு இறங்கவேண்டி வரும் என்று அண்மையில் எச்சரித்திருந்தார். அதன் பின்னரும்கூட விசாரணைகளில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்பட்டதாக அறியப்படவில்லை.

இப்போது, கிழக்குப்பல்கலைக்கழகமுன்னாள்துணைவேந்தர் காணாமலாக்கப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சரும் –முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரகாந்தனை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சாட்சியாக மாறும்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அழுத்தம் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. பிள்ளையானின் சட்டத்தரணியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் செய்தியின் உண்மைத்தன்மைக்கு அப்பால், உயிரித்த ஞாயிறுதாக்குதலின் அடுத்த ஆண்டு நிறைவுதினம் வருகையில் விசாரணைகளின் முன்னேற்றம் வெற்றிகரமானதாக இல்லை என்பது தெளிவாகின்றது. இந்தத் தாக்குதல் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட ஒன்று என்ற அரசியல் கருத்து ஆணித்தரமாக உள்ளது. இந்தத் தாக்குதலின் பின்னர் பெருமளவு பௌத்த சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்தவர்கள் ராஜபக்சக்கள். எனவே அவர்களின் பின்புலத்தில்தான் இந்தத் தாக்குதல் தூண்டப்பட்டது என்கிற ஊகங்களும், அனுமானங்களும் அதிகளவில் காணப்படுகின்றன.

ராஜபக்சக்களுக்கு எதிர் மனோநிலை அல்லது கிளர்ச்சி ஏதுநிலையை ஏற்படுத்துவதில் இந்தக் கருத்தும் கணிசமான பங்களிப்பை வழங்கியதையும் அதன இன்றைய ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தி நன்கு பயன்படுத்திக்கொண்டமையும் மிகத் தெளிவானது. ஆனால், விசாரணைகளின் முன்னேற்றம் ராஜபக்சக்களை நெருங்குவதாகவோ, தாக்குதலின் பின்புலத்தைக் கண்டறிவதற்கும் அதனைத் தூண்டியவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் உரியதாகவோ முன்னேறவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

அண்மையில் கிண்ணியாவில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அரசுத் தலைவர் அநுரகுமார, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று மட்டுமே தெரிவித்திருந்தார். விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தோ, அல்லது தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் கண்டறியப்பட்டது குறித்தோ அவர் எந்தத் தகவலையும் பகிரவில்லை. வழக்கமாக இத்தகைய தகவல்களைப் பொது மேடைகளில் வெளிப்படுத்தக்கூடியவரே அவர். இருந்தாலும் உயிர்த்த ஞாயிறு விசாரணைகள் தொடர்பில் வெளிப்படுத்த அவரிடம் தகவல்கள் இல்லை என்பதால் அவை குறித்து அவர் எந்தத் தகவலையும் பகிரவில்லை என்று எடுத்துக்கொள்ளலாம்.

இறுதிப்போரால்பாதிக்கப்பட்டதமிழ்மக்களுக்குஇலங்கையில் தொடர்ந்தும் நீதி மறுக்கப்பட்டு வருவதைப் போலவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்படுமா?

# பரிசளிப்பு விழா

(ஜிப்ரான்)

மூதூர் அப்றார் சமூக அபிவிருத்தி நிருவனத்தின்(ஏ.எஸ்.டி.ஓ) ஏற்பாட்டில் 'றிஸாலது றமழான்' செயற்திட்டத்தின் கீழ் புனித றமழான் மாத கால பாடசாலை மாணவிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட வகுப்புகளுக்கான பரிசளிக்கும் இறுதி நிகழ்வு நேற்று அதன் தலைவர் மஸ்கூர் மனாஸீர் (நத்வி,,பிஏ, ஜெபி) அவர்களின் தலைமையில் மூதூர் அந்நஹார் மகளிர் மகா வித்தியாலய திறந்த மைதானத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.






இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிண்ணியா வலயக் கல்விப் பணிமனையின் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான ஜனாப் எம்.எம்.முஹம்மது அப்பாஸ். (எஸ் எல் இ ஏ எஸ்) அவர்களும் கௌரவ விருந்தினர்களாக அந்நஹார் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஜனாப் பி.எம்.ஏ. மர்சூக் (எஸ் எல் சி எஸ்) அவர்களோடு சட்டத்தரணி திருமதி சபான் ஷபிய்யா (எல் எல் பி) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை மூதூர் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.ஏ.சபூர்(பத்தாஹி) அவர்களோடு மூதூர் அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளன சபைத் தலைவர் அல்ஹாஜ் எம்.றபீக் (ஜெபி) அவர்களோடு சிறப்பு விருந்தினர்களாக மூதூர் அந்நஹார் மகளிர் மகா வித்தியாலய உப அதிபர் ஏ.டப்பிலியு.எம்.றிஸாத் (நத்வி) அவர்களும் ,ஹன்பல் டறான்போர்ட் உரிமையாளரும் சமூக சேவையாளருமான ஜனாப் பி.எம்.றெஸீம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன் போது விஷேட பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவிகளுக்கான சான் றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு முதலாவது பரிசாக 25000 ரூபாவும் இரண்டாம் பரிசு 20000 ரூபாவும் மூன்றாம் பரிசு 15000ரூபாவும் 10 மாணவிகளுக்கு ஆறுதல் பரிசாக தலா 2000 ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

மேலும் பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாம் சார்பாக பாடசாலைக்கான நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




# மஜீட்புர ஜும்மா பள்ளியின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் மல்வத்தை -03 மஜீட்புரம் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் விஜயமொன்றை மேற்கொண்டு தனது டி-100 திட்டத்தின் ஊடாக சுமார் 2.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்ற பள்ளிவாசலின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பார்வையிட்டார்.



மஜீட்புரம் ஜும்மா பள்ளிவாசலின் முகப்பு தோற்ற வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட ரி-100 திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பிலும், அந்த வேலைத்திட்டத்தின் எதிர்கால தேவைகள் தொடர்பாகவும், மஜீட்புர மக்களின் வாழ்வியல் தொடர்பாகவும், கடந்த காலங்களில் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களினால்சம்மாந்துறை தொகுதியிலும், மஜீட்புர பிரதேசத்திலும் தனது சொந்த ஊருக்கு செய்வது போன்று அவரால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் பற்றி இதன்போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களிடம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துரையாடி அவரது மக்கள் சேவைக்கு வாழ்த்துக்களும், நன்றிகளும் தெரிவித்தனர்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் செயலாளர் நௌபர் ஏ பாவா உட்பட இணைப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# வவுனியாவில் நீச்சல் தடாகத்தில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

## வைத்தியசாலையில் பிரேத அறையிலுள்ள குளிரூட்டி இயங்காமையால் சடலத்தை வைக்க முடியாத நிலை

வவுனியா, தவசிகுளம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல்தடாகத்தில் குளித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் முழ்கியதில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

சம்பவம்தொடர்பாகமேலும்தெரியவருவதாவது-

வவுனியா, சிதம்பரபுரத்தில் தற்காலிகமாக வசித்து வந்த இளைஞர் ஒருவர் தவசிகுளம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்திற்கு தனது உறவினர்களுடன் வருகை தந்திருந்த நிலையில் குறித்த இளைஞர் நீச்சல் குளத்தில் இறங்கி குளித்துள்ளார்.

இதன்போது, அவர் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த இளைஞரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்துள்ளார்.

சம்பவத்தில் கண்டி, நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞரே சாவடைந்துள்ளார். நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் இருந்து வர்த்தக நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்த இளைஞரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

குறித்த இளைஞரின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக பிரதே அறையில் வைப்பதற்கு வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்த குளிரூட்டி கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இயங்காமையால் சடலத்தை அங்கு வைக்க முடியாது எனவும், இறந்தவரின் உறவினர்களை வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஒப்படைக்குமாறும், மறுநாள் (15.04) மீண்டும் வவுனியா வைத்தியசாலைன்கு கொண்டு வருமாறும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த குடும்பத்தினர் தமது குடும்ப நிலை காரணமாக சடலத்தை செட்டிகுளம் வைத்தியாலைக்கு கொணடு செல்ல வாகனத்தை வாடகைக்கு அமர்த்த முடியாத நிலையில் அவதிப்பட்டனர். சம்பவம் தொடர்பில் செய்தி அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் குறித்த குடும்பத்தின் நிலைமையை அறிந்து, வன்னி மாவட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் அவர்களின் கவனத்திற்கு குறித்த விடயத்தை கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், இறந்த இளைஞரின் உறவினர்களுடன் கலந்துரையாடியதுடன், சம்பவம் தொடர்பில் கேட்டறிந்த பின் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரின் கவனத்திற்கு குறித்த விடயத்தை கொண்டு வந்ததுடன், வைத்தியசாலையால் பொறுப்பேற்கப்பட்ட சடலத்தை செட்டிகுளம் அனுப்பி அதனை மீள பெற வேணடியது வைத்தியசாலையின் பொறுப்பு எனத் தெரிவித்திருந்தார். அத்துடன் வவுனியாவின் பிரதான வைத்தியசாலையின் பிரேத அறை குளிரூட்டி நீண்ட





நாளாக பழுதடைந்து இருந்தால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் விளக்கம் கோரியிருந்தார். இதனையடுத்து வைத்தியசாலையால் சடலம் பொறுபேற்கப்பட்டுசெட்டிகுளம்வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். சம்பவம் தொடர்பில்வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். 100



# சட்டம், ஒழுங்கை மீளாய்வுசெய்து இலகுபடுத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் கலந்தாய்வு

(சுபேசன்)

அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைகள் சார்ந்த, அரச சேவையுடன் தொடர்புடையதாக காணப்படுகின்ற சட்ட, ஒழுங்கு விதிகளை மீளாய்வுக்குட்படுத்தி இலகுபடுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண சமூக ஆளுகைத்தளத்தால் மேற்படி முன்மொழிவுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண





சமூக ஆளுகைத்தளத்தின் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான முன்மொழிவுகளை வழங்கியிருந்தனர்.

குறிப்பாக உள்ளூராட்சி சபைகளில் நிலவுகின்ற சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு அதில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் முன்மொழியப்பட்டது.

மேற்படி வரையப்பட்ட முன்மொழிவுகள் பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் தேர்தல் பிரச்சார கூட்டம்

(றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளி வட்டாரத்தின் போட்டியிடும் வேட்பாளரும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.எம். பாயிஸை ஆதரித்து பிரச்சாரக் கூட்டம் திங்கட்கிழமை நடைபெற்றது.

ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சீ.கஸ்ஸாலி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, வேட்பாளர் ஏ. எல்.எம். பாயிஸ், அகில








இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் ஏ.கே.அமீர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# ஜனாதிபதி அநுரவுக்கு உலமா கட்சி பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தை மக்களுக்கு மீட்டு கொடுப்போம் என்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் கருத்தை உலமா கட்சி பாராட்டுவதாக உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்ததாவது -

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீட்டுத்திட்டமே அம்பாறை நுரைச்சோலைசுனாமிவீட்டுத்திட்டமாகும்.சவூதிஅரசால் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.அன்றைய மஹிந்த அரசு வழங்கவிருந்த குறித்த வீட்டுத் திட்டத்தை சம்பிக்க ரணவக்க போன்ற இனவாதிகள் முன்னின்று இதற்கெதிராக வழக்கு தொடரப்பட்டு நிறுத்தப்பட்டது.

இதனை ஜனாதிபதி அதிகாரத்தை கொண்டு சுனாமியால் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும் படி நாம் பல தடவை மஹிந்த ராஜபக்ஷவை கேட்டிருந்தோம். ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவுக்கிணங்க முஸ்லிம்களின் 80 வீத வாக்குககால் ஜனாதிபதியான மைத்திரிபாலவும் இதனை வழங்க முன் வரவில்லை. இதற்காக அழுத்தம் கூட கொடுக்க முடியாத கோழைகளாக ரவூப் ஹக்கீமும் ரிசாத் பதியுதீனும் மைத்திரி அரசில் அமைச்சர்களாக சுகம் அனுபவித்தனர்.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி அவர்கள் விரைவில் இந்த வீட்டித்திட்டத்தை வழங்குவோம் என பகிரங்கமாக சொல்லியிருப்பது மகிழ்ச்சியை தருகிறது.இந்த 2025 ஆம் ஆண்டு முடிவதற்குள் மேற்படி வீட்டுத்திட்டம் வழங்கப்படுவது நல்லது என்பதை உலமா கட்சி கூறிக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிகை ஒப்பனை கடையில் சடலம் ஒன்று நேற்று மீட்பு

## சம்மாந்துறை பகுதியில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

3 நாள்களுக்கு மேலாக இறந்த நிலையில் கதிரை ஒன்றில் அமர்ந்த நிலையில் சடலம் ஒன்றினை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளினையடி சந்தி பகுதியில் உள்ள சிகை அலங்கார கடையொன்றில் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று(செவ்வாய்க்கிழமை) மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் என்பதுடன் உயிரிழந்தவர் வாடகை கடையில் சிகை அலங்கார கடை நடத்தி வந்தவர் என்பதுடன் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதியை சேர்ந்தவர் எனவும் ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த நபர் வேலையின் நிமித்தம் சிகை அலங்கார கடை வேலைகளை முடித்து கடையறைக்குள் இரவு தூக்கத்தை கழிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் மூன்று நாள்களுக்குப் பிறகு இந்த சம்பவம் தெரியவந்துள்ளதுடன் கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலீஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இரு வேட்பாளர்கள் கட்சி தாவினர்

## தேசிய மக்கள் சக்தியுடன் இணைவு

(ஸாகிர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காரைதீவு பிரதேச சபை மூலமாக மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களான ஜே.எம்.ஹசன் மற்றும் என்.எம்.நப்ரின் ஆகிய இருவர் உட்பட அவர்களது ஆதரவாளர்களும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டனர்.

இரு வேட்பாளர்கள் உட்பட அவர்களது இளைஞர் படையணி ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து, எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியுடனே எங்களது பயணம் அமையும் என்றும் உறுதிமொழி கூறி, அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் திகாமடுல்ல மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்திப் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவுடன் ஞாயிற்றுக்கிழமை இணைந்து கொண்டனர்.

வாயால் வடை சுடாமல், பொதுமக்களின் நலன் கருதி, சிறந்த சேவையாற்றிவரும் தேசிய மக்கள் சக்தியே உண்மையான கட்சி என்றும் முஸ்லிம் மக்களுடைய அபிலாஷைகளை முஸ்லிம் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல், முஸ்லிம்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஏற்ற வசதி வாய்ப்பளித்து, இதுவரை எந்த அரசாங்கமும் வழங்காத சந்தர்ப்பத்தை வழங்கி இருக்கின்ற கட்சி என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்கள், மிகச் சிறந்த தலைவர் என்றும், நீதியின் பக்கமே அவர் தலை சாய்ப்பவர். யாருக்கும் அஞ்சாதவர். குற்றம் யார் செய்தாலும் இன, மதம், மொழி கடந்து சட்டத்தை நிலைநாட்டுவதில் குறியாய் இருப்பவர்.

அப்படிப்பட்ட சிறந்த தலைமைத்துவத்தைக்கொண்ட கட்சியான தேசிய மக்கள் சக்தியுடனும் பொதுமக்களின் நன்மைக்காகவே தன்னலம்பாராது சேவையாற்றிவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவுடனும் நான் உட்பட ஏனைய வேட்பாளர் மற்றும் எமது ஆதரவாளர்கள் இணைந்து பயணிக்க மனப்பூர்வமான விருப்பத்துடன், அவரது கரங்களைக் பலப்படுத்தவுள்ளோம்.

இனிவரும் காலங்களில் எமது செயற்பாடுகள் தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சிக்காகவே அமையும் என்றும் அதற்காகவே ஒருமித்து பாடுபடுவோம் என்றும் இணைந்து கொண்ட வேட்பாளர்கள் இதன்போது கருத்து தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசில் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழாவிட்டால் வேறு எந்த அரசாங்கத்திலும் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா அவர்கள் தெரிவித்து



வருகின்ற கருத்து முற்றிலும் உண்மையானது. அவரது அந்த கருத்தே எம்மை இக்கட்சியில் இணைந்து கொள்வதற்கு முற்றுமுழுதான காரண கர்த்தாவாக அமைந்தது என்றும் தெரிவித்தனர்.

எம்மோடு இணைந்து செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் வாருங்கள் கைகோர்த்து செயற்படுவோம். உங்களை வரவேற்க, உங்களை அரவணைத்துச் செயற்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம். 'இத்தேர்தலில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கே வாக்களிப்போம்' என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கரங்களை எப்போதும் பலப்படுத்துவோம் என்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா இதன்போது கருத்து தெரிவித்தார்.



## சுற்றுலாத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் கடந்த வாரம் அயலுறவு அமைச்சில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இச்செயன்முறையின் ஊடாக நாடளாவிய மற்றும் பிராந்திய ரீதியில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கையாளப்படவேண்டிய உத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது

அதற்கமைய சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவன் ரணசிங்க மற்றும் அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திர ஆகியோரின் பங்கேற்புடன் கடந்த வாரம் அயலுறவு அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போது சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்திட்டங்கள் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு ஏற்றவாறான நிலையான கட்டமைப்பொன்றைஉருவாக்குவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேல்மாகாண ஆளுநர் யூஸுப், வடமாகாண ஆளுநர் வேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி, வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ குமாரசிறி, தென்மாகாண ஆளுநர் பந்துல, வடமத்திய மாகாண ஆளுநர் விமலசிறிஜினதாஸ, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால், மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன் மற்றும் ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர ஆகியோரும், மாகாண நிர்வாகத்துறை மூத்த அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

ஒவ்வொரு ஆளுநரும் தத்தமது பிராந்தியத்தில்சுற்றுலாத்துறைசார்ந்துநிலவும் தேவைப்பாடுகள், வாய்ப்புக்கள், சவால்கள் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்ததுடன், அச்சவால்களைக் கையாள்வதற்கான உத்திகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் பற்றியும் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்யக்கூடிய சுற்றுலாத்துறை சார்ந்த இலக்குகளை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் இணைந்து பணியாற்றுவதற்குக் கூட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

## தெற்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனங்களை வழங்கியுள்ளனர். தமிழ் மக்கள் எங்களுடனேயே நிற்கிறார்கள். போரில் ஒருவரும் இறக்கவில்லை. அப்படி இருக்கும்போது ஏன் இத்தகைய தீர்மானங்களைக் கொண்டு வருகிறீர்கள், போரில் இறந்தவர்கள் பயங்கரவாதிகளே என்றுகூறியிருக்கிறார். அவர்பயங்கரவாதிகள் என்று கூறுவது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை. இப்படி அவர்கள் உலகம் எங்கும்சென்று பொய்களைக்கூறுவதற்கான ஆணையையா அவர்களுக்கு வழங்கப் போகின்றோம்? எனவேதான் தேசிய மக்கள் சக்திக்கோ எந்தவொரு சிங்களக் கட்சிக்கோ உள்ளூராட்சி சபைகள் எட்டிவிடக்கூடாது என்கிறோம்.

வடக்கு கிழக்கு என்பது தமிழர் தாயகம். சிங்கள மக்கள் வர முன்பே இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்கள் வைத்து வழிபட்ட இனம் தமிழ் இனம். அப்படிப்பட்ட தமிழர்களை இரண்டாம்தரக்குடிமக்களாகநடத்துகின்றனர்.

பட்டலந்த படுகொலைக்கு நீதி வேண்டும், அதில் சம்பந்தப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவைத் தண்டிக்கவேண்டும் என்று தெரிவித்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். ஆனால் தமிழர்களுக்கு எதிரான போர் தொடர்பான கற்றுக்கொண்டபாடங்கள்மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது. பண்டா செல்வா ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்தாரர்கள், பிரபா ரணில் ஒப்பந்தத்தை நிராகரித்தார்கள், இலங்கை இந்திய ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் அதை ஒன்றும்செய்யமுடியாதுஎன்றுஇந்தியாவுக்கு பயந்து பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கா வாக்களிப்பது?

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு மின்சாரக் கம்பம்தான் தெரியும் நாங்கள் மின்சாரம். நாங்கள் அடிச்சா அவர் தாங்க மாட்டார் - என்றார்.

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் ஆடைத்தொழில்துறைக்கு ஜீஎஸ்.பி.பிளஸ்சலுகைமிகவும்முக்கியமானது, ஏனெனில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கே இலங்கை ஆடைகளின் 28 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்வதற்கு எதிர்க்கட்சியும் தங்கள் ஆதரவை வழங்கும் என்றும், தொழிலாளர்களின்வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காக இந்தச் சலுகை அவசியம் என்றும் பிரேமதாச வலியுறுத்தினார்.

அத்துடன், ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்வதற்காக, தேவையான அனைத்துப் பன்னாட்டு உடன்படிக்கைகளையும் நிறைவேற்றி, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் அடுத்த பொருளாதார நிலையைத் தீர்மானிக்கும் முக்கியமான பயணமாக ஐரோப்பிய ஒன்றிய குழுவின் இந்தவருகைஇருக்கலாம்என்றுபொருளாதார ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## எமது ஆட்சியில் ஊழலிருந்தால் வெளிக்காட்டுங்கள் அரசுக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் சவால்விடுப்பு

தங்கள் கட்சி அரசியல்வாதிகளைத் தவிர ஏனைய அரசியல்வாதிகளை ஊழல்வாதிகள் என்று குற்றஞ்சாட்டும் அரசாங்கம் முடிந்தால் நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையை ஆட்சி செய்துள்ள நிலையில் அங்கு ஊழல்கள் இடம்பெற்றிருந்தால் அதனை பிடியுங்கள் என முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

தமது கட்சி ஆட்சி அமைத்தால் மாத்திரமே ஊழலுக்கு எதிராக செயற்பட முடியும் என்று அரசாங்கம் பொய் பேசி வருகின்றது. ஏனைய சகல அரசியல் தரப்பினரையும் ஊழல்வாதிகள் போல் கூறுகின்றது.

நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினை ஆட்சிசெய்திருக்கின்றோம். அதற்கு முன்னரும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்திருக்கின்றோம். இந் நிலையில், பதவியில் உள்ள அரசாங்கம் என்ற வகையில் நீங்கள் எம்மால் ஊழல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அல்லது துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தாராளமாக கணக்காய்வு செய்து வெளிக்கொண்டு வருங்கள்.

கிராமங்கள் தோறும் மேடைகளை அமைத்து ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என சகலரும் தம்மைத் தவிர ஏனையவர்கள் சகலரும் ஊழல்வாதிகள் என்கின்றனர். தாம் சபைகளை கைப்பற்றினால் மாத்திரமே கிராமங்களைக் கட்டியெழுப்ப முடியும் என்கின்றனர்.

நான் ஐந்து ஆண்டுகள் உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் பதவியில் நிறைவேற்று அதிகாரியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு தொங்கு நிலை சபை ஒன்றை நடத்தியுள்ளேன். பல தமிழ்க் கட்சிகளும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கியுள்ளனர். ஆட்சிக்கு ஆதரவளித்தோர் தமது நலனுக்காக ஆதரவளிக்கவில்லை. சலுகைகளுக்காக ஆதரவளிக்கவில்லை. இந் நிலையில் எம்மை பிரதேச சபைக்கு அனுப்பிய மக்கள் மற்றும் தவிசாளராகத் தெரிவு செய்த ஏனைய கட்சிகளினது கௌரவ உறுப்பினர்கள், தவிசாளராக தெரிவு செய்த கட்சி என சகலரதும் கௌரவமும் நீங்கள் எழுந்தமானமாக முன்வைக்கும்விமர்சனங்களால்பாதிக்கப்படக்கூடாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## வவுனியா பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள நடைபாதை வியாபாரகள் அகற்றப்படும்

### ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் கார்த்தீபன் உறுதி

நாங்கள் வெற்றி பெற்றால் வவுனியா நகரப் பகுதிகளில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களும் அகற்றப்படும் என்று ஜனநாயக தேசிய கூட்டணியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும் வவுனியா மாநகர சபை முதன்மை வேட்பாளர் ப.கார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்நேற்று(செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் -

வவுனியா நகரப் பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக நடைபாதைகள் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பிரதான வீதிகளில் இறங்கியே பயணம் செய்கின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்து நெருக்கடி நிலையும் ஏற்ப்படுகின்றது.

வவுனியாவை பொறுத்த வரை இலுப்பையடிப்பகுதி, நகரபள்ளி வாசலுக்கு முன்பாகவுள்ள வீதி, வைத்தியசாலையை வீதி ஆகியவற்றில் நடைபாதைகளை ஆக்கிரமிக்கப்பட்டு வியாபாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இதற்கு மாற்றுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்தவகையில் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்று மாநகரசபையின் அதிகாரம் எமது கைகளுக்கு வழங்கப்பட்டால் நகரிலுள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களையும் நிச்சயமாக அகற்றுவோம்.

அதற்கு மாற்றீடாக பொருத்தமான இடம் ஒன்றை தெரிவுசெய்து அங்கு குறித்த வியாபார நிலையங்களை அமைப்பதற்கான முறைமை ஒன்றையும் உருவாக்குவோம்.

வடக்கில் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் நகரமாக வவுனியா இருக்கின்ற போதும் உரியதிட்டமிடல் இன்மையால் நகரில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுவருகின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *100*

## முஸ்லீம் மக்களை ஒற்றுமைப்படுத்துகின்ற பாதையில் அஷ்ரப் தெளிவோடு இருந்தார்

### தேசிய காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

தேசிய காங்கிரஸை தேர்தல் ஒன்றில் தோற்கடிப்பது என்பது விட எமது வேட்பு மனு பத்திரத்தை நிராகரிப்பதன் மூலம் தங்களுக்கு ஒரு நிவாரணத்தை பெற்றுக்கொள்வது போன்று நீண்ட காலமாக அரசியல் செய்பவர்கள் பல எத்தனங்களை நாடு முழுவதிலும் மேற்கொண்டு வந்ததை நாங்கள் பார்க்கின்றோம் என தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைகளுக்கானதேர்தலைமுன்னிட்டுவிசேட ஊடக சந்திப்பும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும் திங்கட்கிழமை மாலை அக்கரைப்பற்றில் உள்ள கிழக்கு வாசலில் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிதேர்தலில்பலசவால்களுக்குமத்தியில்தேசிய காங்கிரஸ் உத்தியோக பூர்வமாக களம் நுழைகிறது.தேசிய காங்கிரஸ் என்பது இந்த நாட்டில் உள்ள தேசிய கட்சிகளில் ஒன்றாகும்.குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை மாத்திரம் அல்லாது இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் உரிமை குரலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற கட்சியாக இருக்கின்றது.

மேலும் அரசியல் பொருளாதாரம் மக்களுடைய காணி பிரச்சனை அல்லது கொரோனா தொடர்பான பிரச்சினைகள் உரிமை பிரச்சினைகள் எழுகின்ற பொழுது கடந்த கால வரலாற்றில் முறையான தீர்மானங்களை மக்கள் சார்பாக எடுத்திருந்த கட்சி தேசிய காங்கிரஸ் என்பதை யாரும் மறந்து விட முடியாது.அதே போன்று நாடு முழுவதும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் எந்த ஊருக்கு சென்றாலும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தடயத்தை தவிர வேறு யாருடைய தடயத்தையும் எங்கும் நாங்கள் காண முடியாது. தலைவர் அஷ்ரப் அவர்கள் கடந்த காலங்களில் தேர்தல் அரசியல் செய்த காலகட்டத்தில் அவர் விட்ட தடயத்துக்கு பின்னர் கிழக்கு மாகாண முழுவதும் எந்த ஊருக்கு போனாலும் தேசிய காங்கிரஸின் தடயங்கள் தான் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் தொடர்ச்சியாக வேறு ஒரு காரணங்களின் அடிப்படையில் இயங்கி வருகின்ற அரசியல் கட்சிகள் தேசிய காங்கிரஸ் கட்சியானது அதன் கொள்கையில் இறுக்கமாக இருப்பால் தேசிய காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்ற மனநிலையில் ஒவ்வொரு தேர்தலிலும் அவர்களின் எத்தனங்களை எடுத்து இருக்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய காங்கிரஸ் கட்சியை தோற்கப்பதற்கு முக்கியமாக அரச உத்தியோகத்தர்கள் அல்லது இயக்கங்கள் ஒரு தேர்தல் கேட்டவர்களை போன்றும் ஒரு கட்சிகளை போன்றும் இயங்கிய வரலாறும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வாறானவர்கள் இந்தத் தேர்தலிலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் தோற்கடிப்போம் என்று சொல்லியே ஆரம்பித்தார்கள். இந்தத் தேர்தலிலும் கூட கச்சேரியில் வைத்து உங்கள் கட்சியின் வேட்பு மனு பத்திரங்களை நிராகரிக்கச் செய்வோம் என்று கூறி அச்சுறுத்தினார்கள்.

தேசிய காங்கிரஸை தேர்தல் ஒன்றில் தோற்கடிப்பது என்பதைவிட எமது வேட்பு மனு பத்திரத்தை நிராகரிப்பதன் மூலம் தங்களுக்கு ஒரு நிவாரணத்தை பெற்றுக் கொள்வது போன்று நீண்ட காலமாக அரசியல் செய்பவர்கள் பல எத்தனங்களை நாடு முழுவதிலும் மேற்கொண்டு வந்ததை நாங்கள் பார்க்கின்றோம். உண்மையில் ஜனநாயகம் என்பது சட்டம் என்பது இந்த நாட்டில் நாம் ஏற்றுக் கொள்கின்ற மிக முக்கியமான விடயம். அந்த வகையில் உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்த வரையில் பல காலகட்டங்களில் பலவிதமான மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. நான் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது அதிகமான மாற்றங்கள் அந்தச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டன.அதாவது வட்டார முறைமை கொண்டு வருவதற்கான காரணத்தால் இவ்வாறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வரலாற்றில் தலைவர் அஷ்ரப் அவர்கள் முஸ்லீம் மக்களை ஒற்றுமைப் படுத்துகின்ற பாதையில் தெளிவாக இருந்தார்.உங்களுக்கு பணம் மற்றும் பொருள்கள் கொண்டு வருவார்கள்.4000 ரூபா உதவி தருவதாக கூறுவார்கள்.அந்த காலத்தில் கூட 25 ஆயிரம் ரூபாவிற்கு வீடு கட்டித் தருவதாக கூறுவார்கள்.வீதிகள் கூட போட சொல்வார்கள்.இவைகள் எதுவும் எமக்கு தேவையில்லை.ஒற்றுமை தான் எமக்கு தேவையாகும்.நமது கொள்கைக்கு வாக்களிக்க பழக வேண்டும்.உதாரணமாக ஊடகவியலாளர்களே இதற்கெல்லாம் உதாரமாக மாறி இருக்கின்றீர்கள். அரிசி மற்றும் பணம் கொடுத்து வாக்களிக்கும் முறையை நாம் அனுமதித்தால் இதே போன்று மற்றுமொரு அதிகரிப்பைக் கொண்டு தருவாராயின் மாற வேண்டி ஏற்படும். தற்போது எல்லோரும் அரிசி கொடுக்கின்றார்கள். ஏன் இதையெல்லாம் கூறுகின்றேன் எனின் தேர்தல் என்பது கொள்கைக்காக வாக்களிப்பதாகும்.யாருக்கு நாம் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.எந்த கட்சியின் உடைய கருத்தை பலப்படுத்த வேண்டும். யார் நமக்கான தலைவர். எந்த கட்சியின் உடைய மேயர் எந்த கட்சியினுடைய தவிசாளர் எமக்கு பொருத்தமற்றவர்கள் என நமது சிறுபான்மை மக்களுக்கு தூண்ட வேண்டும்.எமது பிராந்தியத்தில் சிறிய சிறிய அபிவிருத்திகளை செய்தவர்கள் நாங்களல்லர்.ஒவ்வொரு ஊருக்கும் தகுதியான அபிவிருத்திகளை செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்துடன் இருக்கின்ற கட்சி தேசிய காங்கிரஸ் கட்சி தான். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## சம்மாந்துறை பிரதேச சுயேச்சை குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

2025 ஆண்டிற்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேசசபை சுயேட்சைக் குழு 3 அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உத்தியோக பூர்வமாக சிப்கா சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகரும் சுயேச்சைக் குழு தலைவருமான எஸ்.எல்.ஏ நஸார் மற்றும் சம்மாந்துறை பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் முதன்மை வேட்பாளருமான யு.எல்.அஸ்பர் ஜே.பி ஆகியோரால் நாடா வெட்டி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது நிகழ்வில் கிறாஅத் ஓதப்பட்டதுடன் அறிமுக உரையினை இச்சுயேச்சைக் குழுவின் ஊடக செயற்பாட்டாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எம்.சி. அஹமட் புர்கான் ஜேபி மேற்கொண்டார்.

பின்னர் தொடர்ந்து வேட்பாளர் அறிமுகம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்று ஸலவாத்துடன் நிகழ்வ யாவும் நிறைவடைந்தன.

மேலும் சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக வானொலி பெட்டி விளங்கும் என சம்மாந்துறை பிரதேச சபை சுயேட்சைக் குழு 3 இன் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

சம்மாந்துறை மண்ணும் மக்களும் இன்று ஏதிலிகளாக உள்ளார்கள். காரணம் கடந்த 30 வருடங்களாக காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்கள் எமது மண்ணையும் மக்களையும் தொடர்ந்தேச்சையாக ஏமாற்றி வந்துள்ளார்கள். இனியும் ஏமாற்ற காத்திருக்கின்றார்கள். எமது மண் மாட்சி பெற வேண்டும். எமது மக்கள் மீட்சி பெற வேண்டும். அதற்கு காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்களின் சூழ்ச்சிகளில் இருந்து விடுபட வேண்டி உள்ளது. ஆகவேதான் எமது மண்ணையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்கிற சமூக நோக்கத்தை முன்னிறுத்தி பிரதேச சபைக்கு சுயேச்சையாக போட்டியிடுகின்றோம்.சம்மாந்துறை தொகுதி மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய கூடிய அளவுக்கு வாக்கு வலிமையை கொண்டது. ஆனால் சம்மாந்துறை தொகுதிக்கு அண்மைய காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்ச்சியாக கிடைப்பதாக இல்லை.

ஆனால் எமது மக்களின் வாக்குகளை வைத்து வேறு தொகுதிகளை சேர்ந்தவர்கள் எம். பிகளாக வருகின்றனர். அவர்கள் எமது மண்ணையும் மக்களையும் கண்டு கொள்வதே இல்லை. இந்த நிலை மாற வேண்டும். மாற்றம் ஒன்றே முன்னேற்றத்துக்கான வழி அந்த அரசியல்வாதிகள்தான் நாம் இன்று தேர்தல் கேட்பதற்கான காரணம் ஆவர். சம்மாந்துறை பிரதேச சபையில் இருந்து மாற்றம் உருவாக வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கிற சக்தியாக வானொலி பெட்டி விளங்கும்.

நாட்டு மக்கள் ஒருமித்து கடந்த நாடாளுமன்ற தேர்தலில் திசைகாட்டிக்கு வாக்களித்தார்கள். அதே போல சம்மாந்துறை பிரதேச மக்கள் ஒருமித்து வானொலி பேட்டிக்கு வாக்களிக்கின்ற பட்சத்தில் எம்மால் பிரதேச சபையில் ஆட்சியை உருவாக்கி நடத்தவும் முடியும் என சுயேச்சை குழு - 03 இன் தலைமை வேட்பாளர் சமூக சேவையாளர் எஸ். எல். ஏ. நஸார் தெரிவித்தார்.

எமது சம்மாந்துறை மண்ணினதும் அதன் மக்களினதும் பூர்வீகம், இறைமை, பண்பாடு, கலை, கலாசாரம், நாகரீகம் போன்ற இன்னோரன்ன எமது மண்ணுக்கே உரித்தான தனித்துவ அடையாளத்தை நமது எதிர்கால சந்தியினருக்கு கொண்டுசேர்க்கும் பொறுப்பும் தார்மிகக் கடமையும் என்றென்றும் நமக்கான பணியாகும்.

'மாற்றமில்லாமல் முன்னேற்றம் சாத்தியமில்லை' என்ற தூர நோக்குடனான புதிய அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்கி அதற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டியுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் எமது சம்மாந்துறை கற்றுக்கொண்ட பாடமும் பெற்றுக் கொண்ட தோல்வியும் நம்மை வழிநடத்திய பேரினவாத கைக்கூலிகளுக்கும் தனித்துவ அரசியல் பேசிய தரகர்களுக்கும் இப்பிரதேச சபைத் தேர்தலின் மூலமாக நிச்சயமாக பாடம் கற்பித்தேயாக வேண்டும்.அந்தவகையில் சமூக சிந்தனையும், துணிச்சலும், ஆளுமை மிக்கவர்களையும் இப்பிரதேச சபைத் தேர்தலில் களமிறக்கி இருக்கின்றோம். உங்கள் ஆதரவை எமக்கு வழங்குகின்ற போது எம்மால் அதனை திறம்பட செய்துகாட்ட முடியுமென்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது என சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் முதன்மை வேட்பாளருமான யு.எல்.அஸ்பர் ஜே.பி குறிப்பிட்டார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை நாம் கைப்பற்றினால் கொத்தராத்து அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து தூரநோக்குடனான வேலைத்திட்டங்களை செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிகாரிகளை தனது கை பொம்மைகளாக வைத்திருந்த எமது முன்னாள் மக்கள் பிரதிநிதிகளின் அதிகார துஷ்பிரயோகத்திற்குட்பட்ட அரச காணிகள் இனங்காணப்பட்டு அவற்றை நிரந்தர வதிவிடம் இல்லாமல் ஒத்துக்குடியாட்டமாக வாழ்து கொண்டிருப்பவர்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் ஊடாக மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் குடியிருப்புக் காணிகள் மற்றும் நிரந்தர வீடுகளை அமைந்துக் கொடுப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

செந்நெல் கிராமத்தில் அரை குறையாக தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ள பொதுச் சந்தையை பூரணமாக அமைத்து பொது மக்களிடம் கையளித்தலுடன் அதிக விலை கொடுத்து மருந்துப் பொருள்களை வாங்குவதற்கு அவதியுறும் மக்களுக்காக அரச மருந்தகமான (ஒசுசல) என்ற அரச மருந்து விற்பனை நிலையத்தினை சம்மாந்துறையில் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும்.முழு இலங்கையிலும் போதையற்ற பிரதேசம் சம்மாந்துறையே என்ற நன்மதிப்பை எமது மண்ணுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தயாராக உள்ளோம் என சுயேச்சை குழுவின் ஊடக செயற்பாட்டாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எம்.சி. அஹமட் புர்கான் ஜே.பி தெரிவித்தார்.

## தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் பரந்தனில்

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகம் பரந்தன் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து கருத்து தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அபிவிருத்தி ஒழுங்காக நடைபெறவில்லை. இதனால் தான் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் 159 ஆசனங்களை வழங்கினர். கிளிநொச்சி யாழ் மக்கள் மூன்று ஆசனங்களை வழங்கியுள்ளனர்.

இந்த வருடம் வரவு செலவுத் திட்டம் மூலம் பல்வேறு அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

கடந்த ஆட்சியில் படம் காட்டுவதற்காக அபிவிருத்தி செய்வதாக காட்டினர். சமூக வலைத்தளங்களில் இனி வரும் காலங்களில் பலர் கைது செய்யப்படவுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்றம் எங்களிடம் உள்ளது. பிரதேச சபைகளும் எமது கைகளுக்கு வரவேண்டும். ஒரு முறை சந்தர்ப்பம் தாருங்கள் பின்பு எப்படி அபிவிருத்தி நடக்கிறது. என்று பாருங்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தேர்தலில் தோற்றவர்கள் தற்போது எமது கட்சி இனவாத மதவாத கட்சி என்று குறிப்பிடுகின்றனர்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் கேட்கின்றார்கள் தாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று. எமது அரசாங்கத்தில் அது ஏற்படுத்திக் கொடுக்கப்படும். - என்றார். 316

## காரைதீவில் மு. காங்கிரஸின் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

(சகாதேவராஜா)

நடைபெறவிருக்கும் காரைதீவு பிரதேசசபைத் தேர்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எச்.எம். இஸ்மாயில் தலைமையில் சனிக்கிழமை காரைதீவு மாளிகைக்காட்டில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை பிரதான அதிதியாக கலந்து கொண்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், காரைதீவு பிரதேச சபையின் மரச்சின்ன வேட்பாளர்களான எம்.எச்.எம். நாசர், எ.ப்.எம்.றெளபி, பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் மாளிகைக்காடு பிரதேச ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 2 அரசியல் கட்சி ஆதரவாளர்கள் சம்மாந்துறை பகுதியில் மோதல்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியான நாய்குட்டியர் சந்தி பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் பலர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திங்கட்கிழமை இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் காயமடைந்த தேசிய காங்கிரஸின் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம்.சஹீலை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் வருகை தந்து சென்ற பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் உட்பட ஆதரவாளர்களால் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம்.சஹீல் உட்பட அவரது ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் அம்பாறை மாவட்டத்தில் முதலாவது தேர்தல் வன்முறை சம்பவமாக குறிப்பிடப்பட்டுள்ளது.



# சித்திரைத் தேரில் அருள்பாளித்த பன்னங்கண்டிப் பிள்ளையார்

புத்தாண்டு தினத்தில் கிளிநொச்சியில் பச்சை நிற விவசாய வயல்கள் புடைசூழவுள்ள பன்னங்கண்டி பகுதியில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருக்கோயில் சித்திரை தேர் திருவிழாவின்போது பக்தர்கள் பறவை காவடி, பால்சொம்பு மற்றும் அங்க பிரதற்சனை போன்ற நேர்த்திக்கடன்களும் செலுத்தி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு புத்தாண்டு வழிபாட்டிலும் தேர் திருவிழா வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.



புத்தாண்டு தினத்தில் இத்தேர் திருவிழா இடம்பெற்றமையால் கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளில் இருந்து பெருமளவில் பக்தர்கள் வருகை தந்த அடியவர்கள் பிள்ளையார் பெருமானை வழிபடுவதன் மட்டுமல்லாது புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டதை சிறப்பம்சமாகும். 113





காலைக்கதிர் Kalaikkathir

# கழிவுகள் அற்ற ஆரோக்கிய நகரம் தொடர்பில் திறந்த கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

'கழிவுகள் அற்ற ஆரோக்கிய நகரம் - திண்மக் கழிவு முகாமைத்துவ அணுகுமுறை' எனும் தலைப்பிலான செயலமர்வும், திறந்த கலந்துரையாடலும் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பொறியியலாளர் கமால் நிஷாத் ஒருங்கிணைப்பில், சமூக அபிவிருத்திக்கான அமையம் ஏற்பாடு செய்த இந்தக் கலந்துரையாடலில், கொழும்பு மாநகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பொறியியல் பிரிவு பணிப்பாளரும், நிலைபேறான திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக,



தென்கொரியாவில் நடைபெற்ற 2024 விருது பெற்றவருமான எந்திரி. சஹினா மைஸான்



அவர்கள் இதில் வளவாளராக கலந்து கொண்டார்.

கொழும்பு மாநகர சபை கழிவு முகாமைத்துவம் செய்வதில் கடந்தகாலங்களில் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட விதம் குறித்த விளக்கங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், கல்முனை மற்றும் அதனை அண்மித்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றுக்கான சாதகமான தீர்வுகள் மற்றும் இங்குள்ள நிறுவனங்கள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்த கேள்வி பதிலுடன் கூடிய நிகழ்வாக இது அமைந்திருந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் அவர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், கல்முனை ஆதார வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அத்துடன் கல்முனை, சாய்ந்தமருது உட்பட இப்பிராந்தியத்தைச் சேர்ந்த அரச, பொது மற்றும் தன்னார்வ அமைப்புகள் உட்பட ஊடக நிறுவன பிரதிநிதிகளும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டதுடன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா அவர்களின் பிரத்தியேக செயலாளரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தில் நடைபெற்ற விசுவாவசு வருட விசேட பூஜை நிகழ்வு

(சக்திவேல்)

குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீகிருஷ்ணன் ஆலயத்தில் விசுவாவசு வருட விசேட பூஜை நடைபெற்றது.

விசுவாவசு வருட தமிழ் சித்திரைப் புதுவருட விசேட பூஜை வழிபாடுகள் திங்கட்கிழமை(14.04.2025)மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீகிருஷ்ணன் ஆலயத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்களின் பங்கேற்றலுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.





ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கிரியை வழிபாடுகளை தொடர்ந்து, சம்பிரதாய பூர்வமாக மருத்து நீர் பெருமானுக்கும், அடியவர்களுக்கும் வைக்கப்பட்டு, விசேட அபிசேக பூஜை வழிபாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பூஜை வழிபாடுகள் யாவும்ஆலய பிரதம குரு சிவ.நா.சோமேஸ்வரம் குருக்கள் தலைமையில் இடம்பெற்றன.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2025இல் வெளியிடப்பெற்றது